# சைவ போதினி



மூன்றாம் வகுப்பு

கொழும்பு விவேகானந்த சபை வெளியீடு

உ

சிவமயம்

# சைவ போதினி

## மூன்றாம் வகுப்பு

அரசினர் பாடத்திட்டத்திற்கு
அமைய எழுதப்பெற்றது.

1979

உரிமை பெற்றது] [விலை: ரூபா 1-70

உ

# பதிப்புரை

எமது சபையார் நடாத்தும் அகில இலங்கைச் சைவ சமயபாடப் பரீட்சைக்குரிய அரசினர் பாடத்திட்டத்துக்குச் சிறந்த முறையில் உதவக்கூடிய வழியில், ''சைவபோதினி'' தொகுக்கப்பட்டுள்ளது. சைவ மாணக்க, மாணுக்கியர் தத்தம் தகுதிகட்கு ஏற்றவாறு, இலகுவிற் படித்துக்கிரகிக்கக்கூடிய முறையில், இப்புதிய வெளியீடு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் மூன்றும் வகுப்புச் சிறுவர்களுக்குப் பயன்படக்கூடிய சிறந்த பதிப்பாக அச்சிடப்பட்டிருக்கின்றது. சைவசமயத்தின் தத்துவார்த்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடங்கள் நாயன்மார் சரித்திரங்கள், புராணக்கதைகள், சைவத் திருமுறைகள் இப்பதிப்பில் இலகுவாகப் போதிக்கப்படக்கூடிய முறையில் அரசினர் பாடத்திட்டத்தைத் தழுவியே எழுதப்பட்டுள்ளன.

கடந்த ஐம்பது வருடங்களாக இச்சபையாரால் ஆண்டு தோறும் நடாத்தப்பட்டுவரும் அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சையும், இப்பரீட்சையின் அடிப்படைக் காரணமாகிய சைவசமயப் போதனையும் மேன்மேலும் விருத்தியடைந்து வருவதற்கு ''சைவபோதினி'' ஒரு பற்றுக்கோடாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

''குற்றங் களைந்து குணமளைந்து கொள்ளுதல், கற்றறிந்த மாந்தர் கடன்'' என்பதற்கமைய, இப்பதிப்பிற் குறைகள், பிழைகள் இருப்பின் அவற்றை எமக்கு அறிவிக்குமாறு அன்பர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

இந்நூற்றொகுதியில் உள்ள பாடங்களை ஒழுங்காகக் கற்கும் மாணவருலகம் நன்மைபெறும் என்பதில் யாதுமோர் ஐயுறவில்லை.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''


66, விவேகாநந்த மேடு,
கொழும்பு - 13
17-1-79

கொழும்பு
விவேகாநந்த சபையார்.




12-ஆம் பதிப்பு: ஜனவரி 1979: 15,000 பிரதிகள்.

உ

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் தேவாரம் | 1 |
| 2. | கோயிலுக்குச் செல்லுதல் | 4 |
| 3. | சரியை வழிபாடு | 7 |
| 4. | கோயிலைச் சுத்தம் செய்தல் | 9 |
| 5. | தேவாரம் | 13 |
| 6. | சிவபிரான் கல்லானைக்குக் கரும்பு திற்றியது | 16 |
| 7. | சிவபிரான் பாலனய்த் தொட்டிலில் கிடந்தமை | 19 |
| 8. | சுந்தரமூர்த்தி நாயனர் | 22 |
| 9. | சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரம் | 27 |
| 10. | கந்தசுவாமியார் பிரமதேவனுக்குப் படிப்பித்தது | 30 |
| 11. | சிவபெருமான் மண் சுமந்தமை | 32 |
| 12. | திருவாசகம் | 38 |
| 13. | கௌசிக முனிவர் | 41 |
| 14. | பட்டினத்துப் பிள்ளையார் | 43 |
| 15. | யாழ்ப்பாணம் வைத்திசுவரன் கோயில் | 47 |
| 16. | திருமந்திரப்பாடல், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ் | 49 |
| 17. | உலகநீதி | 51 |
| | வினத்தாள் 1972 — 1973 | 53 |


சைவப்பிரகாச அச்சியந்திரசாலை - யாழ்ப்பாணம்.



திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

உ

சிவமயம்

1-ஆம் பாடம்

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

## ( 1 )

திருப்பாசுரம்

பண்—கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இதன்பொருள்:- பிராமணர், தேவர்கள் யாவரும் நன்றாக வாழ்க. பசு இனங்களும் வாழ்க. குளிர்ந்த மழை பொழிக. அரசனும் சிறந்து வாழ்க. கெட்டன எல்லாம் அழிக. சிவபிரான் திருநாமம் எங்கும் எப்பொழுதும் முழங்குக. உலகத் துன்பங்கள் நீங்குக.

குறிப்பு:- அந்தணர் — பிராமணர், ஆனினம் — பசுக் கூட்டம், அரன் — சிவபெருமான்.

## ( 2 )

**திருப்பிரமபுரம்**

பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர்
    தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்
    உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்
    தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
    பெம்மான் இவனன்றே.

திருச்சிற்றம்பலம்

பொருள்:- தோடணிந்த காதை உடையவன்; இடப வாகனத்தின் மேல் ஏறி வருபவன்; சடையிலே பிறையை அணிந்தவன்; திருமேனியிலே சுடலைச் சாம்பலைப் பூசியவன்; இப்படி வந்து என் மனத்தைத் தன்னிடம் இழுத்தவன்; முற்பிறப்பிலே இதழ்களை உடைய பூக்களை இட்டு நான் வழிபட்டமையால் இப்போது எனக்கு அருள் செய்தவன்; பெருமைபொருந்திய அப்பெருமான் சீகாழிக்கோயிலிலே இருக்கின்ற இந்தச் சிவபெருமானே.

குறிப்பு:- விடை—இடபவாகனம். தூ—சுத்தமான; காடுடைய சுடலைப்பொடி—சுடுகாட்டிலுள்ள சாம்பல். ஏடு-பூவின் இதழ். பீடு-பெருமை. பெம்மான்—பெருமான் அல்லது கடவுள். இவன்— தந்தையாருக்குப் பிள்ளையார் சுட்டிக்காட்டிய சிவன். பிரமபுரம்—சீகாழி.

## ( 3 )

### திருநெய்த்தானம்

பண்—நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மெனீரே

திருச்சிற்றம்பலம்

பொருள்:- நஞ்சினாலே கறுத்த கண்டத்தை உடைய வர்; உமாதேவியாரை இடப்பாகத்திலே வைத்திருப்பவர்; எவரும் அழிக்கமுடியாத துதிக்கையை உடைய யானைத் தோலைப் போர்த்திருப்பவர்; வயலிலுள்ள நீலோற்பலப் பூவைப்போன்ற திருக்கண்ணையுடைய உமாதேவியாருடன் நெய் முதலியவற்றால் அபிஷேகம் செய்யப் பெறுபவர். அப்படிப்பட்ட சிவபெருமான் எழுந்தருளிய திருக்கோயில் திருநெய்த்தானம் என்று கூறுங்கள்.

குறிப்பு:- மை—கருமை. மலைமகள்—உமாதேவி. கையாடிய—கை அசைந்துகொண்டிருக்கின்ற. கரி—யானை உரி—தோல், செய்ஆடிய—வயலிலே அசையும், நயனம்—கண், நெய் ஆடிய — நெய்யினால் அபிஷேகம்பெற்ற.

---

குறிப்பு:- தேவாரம் முதலிய திருவருட்பாக்களைப் பாடத் தொடங்க முன்னும் பாடி முடித்த பின்னும் "திருச்சிற்றம்பலம்" என்று சொல்ல வேண்டும்;

2-ஆம் பாடம்

# கோயிலுக்குச் செல்லுதல்

கடவுள் ஆன்மாக்களுக்கு அருள் புரியச் சிறப்பாக எழுந்தருளியிருக்கும் இடம் கோயிலாகும்.

பாலுள்ள பசுவின் மடியிலிருந்து நாம் இன்சுவைப் பாலைப் பெறுகிறோம்; அது போலவே கோயிலிலுள்ள இறைவன் திருவுருவத்தை வழிபட்டு நாம் அருளைப் பெறுகிறோம்.

சைவ சமயத்தவர் நாள் தோறும் கோயிலுக்குச் செல்ல முடியாவிடில் வெள்ளிக் கிழமைகளிலே தவறாது சென்று வழிபடல் வேண்டும். விசேட தினங்களில் கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபடுதல் நமது கடன்.

நம் ஊர்களிலே, பிள்ளையார், சிவபெருமான், அம்பாள், முருகப் பெருமான் கோயில்கள் உண்டு.

ஒரு பெரியாரை நாம் காணச் செல்லும் போது சுத்த உடலுடன் சுத்தமாக உடை அணிந்து அவர் மனம் மகிழச் செல்கின்றோம். அப்படியாயின் எல்லோரிலும் பெரிய கடவுளை வணங்கக் கோயிலுக்கு நாம் செல்

லும்போது எவ்வளவோ சுத்தமாக அன்புட னும் அமைதியுடனும் செல்லுதல் அவசியம் அல்லவா? குளித்து, தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, திருநீறு அணிந்து, கடவுளைப் பற் றியே சிந்தித்துக் கொண்டு, பூ முதலியவற் றுடன் கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும். கால்களைக் கழுவித், தூல லிங்கமாகிய கோபு ரத்தை வணங்கி சிவ நாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே போதல் வேண்டும்.

திருக்கோயிலினுள்ளே போனவுடன் பிள்ளையாரை வணங்குதல் வேண்டும். பிள்ளை யாரை வணங்கும்போது முட்டியாகப் பிடித்த இரு கைகளாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டிக்கொள்ள வேண்டும். பின் வலக்காதை இடக் கையினாலும் இடக் காதை வலக்கையி னாலும் பிடித்துக் கொண்டு மூன்று முறை இருந்து எழுந்து (தோப்புக் கரணம் இட்டு) வணங்குதல் முறை. பிள்ளையாரை வணங்கிய பின் சந்நிதானத்தை அடைந்து வணங்க வேண்டும்.

ஆண்கள் தலை, கை இரண்டு, செவி இரண்டு, மோவாய், தோள்கள் இரண்டு ஆகிய எட்டு உறுப்புக்களும், நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் வேண்டும்.

பெண்கள் தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் வேண்டும்.

தோத்திரம் சொல்லியபடியே கோயிலை மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் வலம் வந்து கும்பிடுக. கடைசியாக சண்டேசுரரை வணங்குதல் முறை. அவரே சிவதரிசனத்தின் பலத்தைத் தருபவர். அவரைக் கும்பிட்டுத் தோத்திரஞ் செய்து மூன்றுமுறை கைகொட்டி வணங்குதல் வேண்டும்.

அதன்மேல் எம்பெருமான் சந்நிதானத்திலே சிறிது நேரம் இருந்து, மன அடக்கத்தோடு அவரை மனத்தாலும் துதித்து, எழுந்து வீடு செல்லுதல் வேண்டும்.

> *"கால்க ளாற்பயனென்*
> *கறைக் கண்டனுறை கோயில்*
> *கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்*
> *கால்க ளாற்பயனென்"*

விஞக்கள்

1. கோயிலுக்கு யாம் எப்படிச் செல்லுதல் வேண்டும் ?
2. நாம் பிள்ளையாரை எப்படி வணங்குகிறோம்?
3. சண்டேசுரரை எப்போது வணங்குதல் வேண்டும் ?
4. உமது கிராமத்திலுள்ள கோயில்கள் எவை?

ஸ்ரீ சிவமயம்

## சரியை வழிபாடு

சிவபெருமான் ஆண்டவர். நாம் அவருக்கு அடிமைகள். அவர் எங்களுக்குத் தந்தையும் தாயுமாக இருந்து வேண்டிய நன்மைகளைச் செய்கிறார். எங்கள் தலைவராகிய இறைவனுக்கு எங்களால் இயன்ற தொண்டுகளை மிக்க அன்புடன் செய்தல் வேண்டும். இப்படிச் செய்யப்படும் தொண்டு சரியை வழிபாடு எனப்படும்.

கோயிலிலே செய்வதற்குப் பல தொண்டுகள் உண்டு. கோயில் மண்டபங்களையும் வீதிகளையும் கூட்டுதல் அலகிடுதல் எனப்படும். மெழுகக் கூடிய கோயிற் பகுதிகளை பசுவின் சாணத்தினால் மெழுகினால் அல்லது நீர் தெளித்தால் அவை பரிசுத்தமாயிருக்கும். வெளி வீதியிலுள்ள கற்களையும் முட்களையும் அகற்றுதல் நல்ல தொண்டாகும். சுத்தமான இடத்திலே நின்று கும்பிட்டால் எமது மனம் சுத்தமும் அமைதியுமடையும். சுத்தம் சிவத்திற்கு அடுத்தபடி என்பர்.

எம் பெருமான் கோயிலின் அயலிலே பூந்தோட்டம் ஒன்றை ஆக்கலாம். அங்கே பூசைக்கு வேண்டிய பூ மரங்களையும் செடி

கொடிகளையும் உண்டாக்கலாம். பூக்களைக் கொய்து வந்து சுத்தமான இடத்திலே வைத்து சுவாமிக்கு மாலை கட்டிக் கொள்ளலாம்.

கோயிலிலே சுவாமி சந்நிதானத்திலே திருவிளக்கேற்றுதலும், சுகந்த தூபமிடுதலும் சிறந்த தொண்டுகளாகும். திருவிழாக் காலங்களிலே சுவாமி வீதிவலம் வரும்போது தீவர்த்தி பிடித்தல், சுவாமியைத் தோளிலே தாங்கி வருதல், வாகனம் காவுதல், தேர் இழுத்தல் முதலியன பெரிய தொண்டுகளாம்.

இவை சரியைத் தொண்டுகளில் சிலவாகும்.

பூ எடுத்து, மாலை தொடுத்து அவற்றை இறைவனுக்குச் சாத்தி முத்தியடைந்தவர் முருக நாயனார். கணம்புல்ல நாயனார் திருக்கோயிலிலே திருவிளக்கேற்றி சிவபதம் அடைந்தார். இறைவன் சந்நிதியிலே நறுமணத் தூபம் இட்டு இறைவன் திருவடிகளை அடைந்தவர் குங்குலியக் கலய நாயனார்.

இப்படி எங்களால் இயன்ற தொண்டுகளை அன்புடன் நாமும் செய்துவரின் இறைவன் எமக்கும் அருள் புரிவார். கணநாத நாயனார் இப்படி அடியார்களைச் சரியைத் தொண்டில் ஈடுபடுத்தினார்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே"

## வினாக்கள்

1 தொண்டு செய்தலாகிய வழிபாட்டை எப்படிக் கூறுவர் ?

2 கோயில் ஏன் சுத்தமாயிருத்தல் வேண்டும் ?

3 நாம் செய்யக்கூடிய சில கோயில் தொண்டுகள் கூறுக.

4 நிரப்பி முழு வாக்கியமாக்குக.

(i) கோயில் வீதிகளில் ஒன்று உள்வீதி ______

(ii) பூக்களைச் ______ சுத்தமான ______ இருந்து மாலை ______

4-ஆம் பாடம்

# கோயிலைச் சுத்தம் செய்தல்

தினந் தோறும் நாம் பல் விளக்கி, முகம் கழுவிக், குளித்து எம்மைச் சுத்தமாக வைத்திருக்கிறோம். எமது வீடுகளைக் கூட்டிக் குப்பை கூழங்களை அகற்றி, நீர் தெளித்துக் கோலமிட்டு அழகாக்குகிறோம். வீடு அழகாக இருக்கும்போது மனமும் இன்புறுகிறது.

அப்படியாயின் பலரும் வந்து வழிபடும் கோயிலை நாம் மிகச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமல்லவா? அடிக்கடி வழிபாட்டிற்காக

மக்கள் வந்து செல்வதால் நாள் தோறும் இடையிடையே கோயிலைச் சுத்தம் செய்தலும் அவசியம்.

பழைய பூக்கள், மாலைகள், இளநீர்க் கோம்பைகள், தேங்காய் முடிகள், வாழை நார்கள் முதலியன கோயிலின் பக்கங்களிற் குவியும். அவற்றை அடிக்கடி அகற்ற வேண்டும். அகற்றத் தவறினால் கோயிலின் அயல் அழுக்காகிவிடும்.

சுவாமிக்கு அபிஷேகம் செய்வதால் அபிஷேக நீர் கோமுகை வழியாகப் பாய்ந்து நிலத்தைச் சேறாக்கிவிடும். அதனால் அடியார்கள் துன்பப்படுவார்கள்.

கோயிற் பாத்திரங்களைத் துப்பரவுசெய்யும் போது சாம்பல், கரி, தேங்காய் மட்டைகள் நீர் முதலியவற்றால் நிலம் அழுக்கடையும்.

ஆகவே கோயிலின் சுற்றுடலை அடிக்கடி சுத்தம் செய்தல் அவசியம்.

வீதியிலுள்ள மரங்களிலிருந்து இலைகள் பூக்கள் உதிர்கின்றன. அவற்றை அள்ளி மரங்களுக்குப் பசளை ஆக்கலாம். கோயில் வீதியில் புல் பூண்டுகளைப் பிடுங்குதலும், முள் மரங்களை வெட்டுதலும், கற்களை அகற்றுதலும்

கோயிலின் பக்கங்களைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு வழியாகும்.

அதிகாலையில், புலர்வதன் முன் அலகிட்டு, மெழுக்கிட்டு, நீர் தெளித்தல் அவசியம். கோயிலும் அதன் சுற்றுப்புறமும் சுத்தமாக இருக்கும் நிலையிலேயே எம்பெருமானுக்குத் தூப தீபமிட்டுப் பூசை நடைபெறல் வேண்டும். அப்பொழுது அடியாருள்ளமும் பரிசுத்தமாகும்.

இப்படித், தாம் செல்லுமிடமெல்லாம் உழவாரம் கொண்டு ஆலயத் திருத்தொண்டாகிய சரியைத் தொண்டு செய்து முத்தியடைந்தவர் அப்பர் சுவாமிகள். அவரே நமக்கு வழிகாட்டி.

"விளக்கினார் பெற்ற இன்பம்
மெழுக்கினாற் பதிற்றியாகும்"

விஞக்கள்

1 ஏன் நாள்தோறும் கோயிலை இடையிடையே சுத்தம் செய்தல் வேண்டும்?

2. எப்போது கோயிலில் நீர் தெளித்தல் அவசியம்?

3. சரியைத் தொண்டு செய்த நாயனார் ஒருவர் பெயர் தருக.

4. விட்ட இடம் நிரப்புக:

(i) வெளி வீதியிலே............ வெட்டி .......... அகற்றிச் சுத்தம் செய்யலாம்.

(ii) உதிர்ந்த ...... களையும் இலைகளையும் ...... ஆக்கலாம்.



அப்பர் சுவாமிகள்

5-ஆம் பாடம்

# அப்பர் சுவாமிகள் தேவாரம்

## (1)

அப்பர் சுவாமிகள் சூலை நோயால் மிக வருந்தினர். சிவபெருமானை நோக்கி அக் கொடிய நோயை நீக்குமாறு வேண்டி இத னைப் பாடினர். அவர் இதனைப் பாடிய தலம் திரு அதிகை வீரட்டானம்.

திருவதிகை வீரட்டானம்

பண்—கொல்லி

திருச்சிற்றம்பலம்

கூற்று யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்று யடிக்கே இரவும் பகலும்
பிரியா துவணங் குவன்எப் பொழுதும்
தோற்ற தென்வயிற் றின்அகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே!

திருச்சிற்றம்பலம்

பொருள்: இச் சூலைநோய் எனக்கு யமன் போலிருக்கிறது. சுவாமி, அதை நீக்கிவிடல் வேண்டும். நான் வேண்டுமென்று எண்ணி எக்கொடுமையும் செய்யவில்லை. என்னை ஏற்றுக்கொண்ட கடவுளே! இரவும் பகலும் விட்டுப் பிரியாது தேவரீரையே வணங்குகிறேன். இந்த நோய் கண்ணுக்குத் தெரியாமல் என் வயிற்றினுள்ளே குடலோடுசுற்றி முறுக்குகிறது. கெடில நதி பாய்கின்ற திரு அதிகை என்னும் இடத்திலுள்ள திரு வீரட்டானத்தில் எழுந்தருளியுள்ள பிதாவே!

என்றால் இந்த நோயைத் தாங்க முடியவில்லையே; (இரங்கி, நோயைத் தீர்த்து அருளுக.)

குறிப்பு:- கூற்று—இயமன். ஏற்றாய்—என்னை அன்பாகச் சேர்த்துக் கொண்டவனே; அடிக்கு—உன் பாதங்களுக்கு. துடக்கி முடக்கல்—சூலை நோய் சுற்றி முறுக்கி வருத்துதல். கெடிலம்—ஓர் ஆற்றின் பெயர்; திரு அதிகை என்னும் இடத்தில் வீரட்டானம் ஒரு கோயில்; உறை—வீற்றிருக்கின்ற. அம்மான்—கடவுள்.

## ( 2 )

அப்பர்சுவாமிகளைச் சமண அரசன் கல்லோடு கட்டிக் கடலிலே இட்டபோது சிவநாமம் பாடி அவர் மிதந்து கரையேறியபோது பாடியது.

நமச்சிவாயத் திருப்பதிகம்

பண்—காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்

பொருள்:- எமக்கு உற்ற துணை என்று சொல்லப்படும் அந்தணனும் ஒளி வடிவான தேவனுமாகிய இறைவனுடைய அழகிய பாதங்கள் இரண்டையும் கைகூப்பி வணங்குவோம். அப்படிச் செய்தால் பகைவர் கல்லோடு சேர்த்துக் கட்டி எம்மைக் கடலிலே இட்ட நேரத்திலும் நாம் கடலிலே அமிழ்ந்தாது துணை செய்வது அவருடைய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தேயாம்.

(சிவபெருமானுடைய திருமந்திரம் நமச்சிவாய என்பது. அது எங்களுக்கு எப்பொழுதும் நல்ல துணையாகும் என்பதே கருத்து.)

குறிப்பு:- வேதியன்—சிவபெருமான். வானவன்—கடவுள். பொற்றுணை—பொன் போலும். திருந்தடி—அழகிய திருப்பாதம். கற்றுணைப் பூட்டி—கல்லை இறுகக் கட்டி. நல்துணை—எங்களுக்கு நல்லதுணை.

(3)

திருப்பாதிரிப்புலியூர்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர
வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி இருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே.

திருச்சிற்றம்பலம்

பொருள்:- புண்ணியமூர்த்தியாகிய கடவுளே! நான் அற்பமான புழுப் பிறவி எடுத்தாலும் உன் பாதங்கள் இரண்டும் என் மனத்திலே உறுதியாக இருக்க எனக்கு அருள் செய்க. திருப்பாதிரிப் புலியூர் என்ற தலத்திலே நீர் வற்றாத கங்கை ஆற்றைச் சடைமேல் வைத்த சோதி வடிவானவனே! உன்னை வணங்கும் என்மீது இரக்கம் கொண்டு திருவருள் செய்.

குறிப்பு:- புழு—மிக அற்பமான எலும்பில்லாத பிராணி. வழுவாதிருக்க—உறுதியாக இருக்கும்படி. வையகம்—பூமி. புனற்கங்கை—எப்பொழுதும் நீர் நிறைந்த கங்கை ஆறு. தீ—நெருப்பு. வண்ணன்—அழகுடையவன்;

6-ஆம் பாடம்

# சிவபிரான் கல்லானைக்குக் கரும்பு நீற்றியது

அபிடேக பாண்டியன் மதுரையை அரசாண்ட காலத்திலே ஒரு சித்தர் மதுரைக்கு வந்து பல அற்புதங்களைச் செய்தார்.

யாவரும் காணத் திடீரென மறைவார். தூரத்தில் உள்ள பொருள்களைக் கிட்ட வரும்படி செய்வார். கிட்ட உள்ள பொருள்களை அதி தூரத்திலே தோற்றுமாறு செய்வார். வைகையாற்று நீரைத் திடீரென்று பெருகச் செய்வார். மீள வற்றும்படி செய்வார். கடல் நீரை நல்ல நீராக்குவார்.

இப்படிப் பல பல அற்புதச் செயல்களை அவர் செய்வதை அறிந்த மன்னன் அவரைத் தன்னிடம் வரும்படி அழைத்தான்.

அரசனால் தனக்கு ஆகக்கூடியது ஒன்றுமில்லை என்று எண்ணி, அவர் வர மறுத்து விட்டார். பாண்டிய மன்னன் தானே அப் பெரியாரிடம் சென்றான்.

அவர் புலித்தோலின் மீது இறுமாப்புடனிருந்தார். பாண்டியன் அவர் நாட்டையும்

ஊரையும் பெயரையும் விசாரித்தான். அவர் எல்லா நாட்டிலும், எல்லா ஊரிலும் வாழும் "எல்லாம் செய்ய வல்ல சித்தர்" என்று தம்மைப் பற்றிக் கூறினர்.

அப்பொழுது ஒருவன் பாண்டிய மன்னனுக்குக் கரும்பு கொண்டு வந்து கொடுத்தான். மன்னன், "எல்லாம் செய்ய வல்ல சித்தராயின், இதோ இந்தக் கரும்பைப் பக்கத்திலுள்ள கல் யானை உண்ணும்படி செய்வீராயின் சோமசுந்தரக் கடவுள் நீரே. நீர் விரும்பியது தருவேன்" என்றான்.

சித்தர் புன்முறுவல் தவழ "உன்னிடம் யாம் பெறவேண்டியது ஒன்றும் இல்லை. உன் ஆசை தீர நாமே உனக்கு வேண்டியது தருவோம். இதோ கல்யானை கரும்பு கறிப்பதைப் பார்" என்று கூறி அந்த யானைமீது கடைக்கண் சாத்தினர்.

அவ்வளவில் அக்கல்யானை உயிர்பெற்று, வாய் திறந்து, ஆரவாரித்துப், பாண்டியன் கையிலுள்ள கரும்பைப் பறித்துக் கறித்தது. கருப்பஞ் சாறு கடைவாயால் வழியப் பருகிச் செருக்குடன் நின்றது.

சித்தர் யானை மீது கரத்தை வைத்து அருளுடன் அதனைப் பார்த்தருளினர். அது

கல்லாக மாறிற்று. பின் சித்தர் திடீரென மறைந்தருளினார்.

பாண்டியன் மதுரைச் சோமசுந்தரப் பெருமானே செய்த திருவிளையாடல் அஃது என அறிந்தான். தன் பிழையைப் பொறுத் தருளுமாறு பன்முறை வேண்டித் துதித் தான். பெருமான் அவனுக்குத் திருவருள் புரிந்தார்.

'சித்தா சித்தித் திறங்காட்டுஞ்
சிவனே தேவர் சிங்கமே''

வினாக்கள்

1 சித்தர் செய்த அற்புதங்கள் எவை ?

2 பாண்டியன் சித்தரை நாடு, ஊர், பெயர் விசாரித்தபோது அவர் என்ன விடை தந்தார்?

3 சித்தர் மறைந்ததும் பாண்டியன் யாது கூறித் துதித்தான் ?

7 ஆம் பாடம்

# சிவபெருமான் பாலனைத் தொட்டிலிற் கிடந்ததை

மதுரையிலே விருபாக்கன் என்னும் பிராமணன் ஒருவன் இருந்தான். அவனுடைய மனைவி கற்பிற் சிறந்தவள். அவள் பெயர் சுபவிரதை. குழந்தை இல்லாமையால் இருவரும் பல தான தருமங்களைச் செய்து வாழ்ந்தனர். அவர்கள் செய்த தவப் பயனால் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அப் பிள்ளைக்குக் கௌரி என்று பெயரிட்டனர்.

இத் தவக் குழந்தை இளமையிலேயே தேவி மந்திரத்தை முறைப்படி பயின்றது. விருபாக்கன் தன் மகளைத் தவத்தாலுயர்ந்த ஒரு சிவப்பிராமணனுக்குத் திருமணம் செய்து கொடுக்க விரும்பினான். ஆனால் அவள் ஒரு வைணவப் பிராமணனையே விவாகம் செய்ய நேர்ந்தது.

நாயகன் பெண்ணைத் தன் வீட்டிற்குக் கொண்டு சென்றான். அங்கு அவனுடனும், அவனுடைய தாய் தந்தையருடனும் கௌரி வசித்து வந்தாள் தாய் தந்தையருக்குத்தான்

கௌரி மேல் பிரியமில்லாது அவளை ஒதுக்கி வைத்து நடத்தினர்.

இவர்கள் எல்லோரும் ஒரு நாள் தமது சுற்றத்தார் திருமணமொன்றிற்குச் செல்லப் புறப்பட்டனர். கௌரியைத் தனியே விட்டு வீட்டையும் பூட்டிக் கொண்டு போனார்கள்.

கௌரி சிவ சிந்தனையாகவே இருந்தாள். தான் ஒரு சிவனடியாரையேனும் வரவேற்று, உபசரித்து, அவருக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் கிட்டவில்லையே என்று வருந்தினாள். இதனை அறிந்த சிவபெருமான் தானே ஒரு கிழச் சிவனடியார் போலக் கௌரியிடம் வந்தார். கௌரி மனம் மகிழ்ந்து அவரை அன்புடன் வணங்கி வரவேற்றாள்.

பசியோடு தன்னிடம் வந்த சிவனடியாருக்கு அமுது படைக்க முடியவில்லையே என்று வீட்டினுள்ளே இருந்த கௌரி வருந்தித் துடித்தாள். "குழந்தாய்! உன் கையினாலே கதவின் பூட்டைத் தொடு. அது தானாகவே திறக்கும்" என்று சிவனடியார் கூறினார். கௌரி அப்படியே செய்யப் பூட்டும் திறந்தது.

கௌரி அன்புடன் சமைத்து, அடியவருக்கு ஆதரவுடன் அன்னமிட்டாள். திருவமுது

செய்ததும், அந்தக் கிழவனார் பதினாறு வயது இளங் காளை வடிவங் கொண்டார். கௌரி அஞ்சி, செய்வதறியாது, கூசி ஒதுங்கி நின்றாள்.

இந்த நிலையிலே திருமணத்திற்குச் சென்ற வீட்டுக்காரர் திரும்பிவிட்டனர். இளை ஞன் இப்போது அழகிய பச்சிளங் குழந்தை யாகிக் காலை வளைத்துப் பெருவிரலை வாயில் வைத்துச் சுவைத்தபடி கிடந்தான். மாமியார் அக் குழந்தை, யார் எனக் கௌரியிடம் கேட்டாள். அது அயல் வீட்டார் தன்னிடம் சிறிது நேரம் பார்க்குமாறு விட்டுச் சென்ற குழந்தை, என்றாள் கௌரி.

எல்லோரும் குழந்தையுடன் கௌரியை வெளியே துரத்தினர். உறவினரற்ற ஏழைப் பெண் மதுரைப் பெருமானை மனத்திலே நினைந்து தேவி மந்திரத்தை உச்சரித்தாள். அப்பொழுது சிவபெருமான் தோன்றி, எப் பொழுதும் தேவி மந்திரத்தை உச்சரிக்கும் அக் கௌரியை உமாதேவி வடிவாக்கி, இடபத்தில் ஏற்றித் தம் பக்கலில் இருக்க அருளினார்.

எல்லோரும் இந்த அதிசயத்தை நோக்கிக் களிப்புற்றனர்.

"வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்"

விஞக்கள்

1 கௌரி இளமையிலே பயின்ற மந்திரம் யாருக்குரியது ?

2 கௌரியை மாமன் மாமியார் வெறுத்ததேன்?

3 தனித்திருந்த கௌரியின் மனத்தில் என்ன எண்ணம் எழுந்தது ?

4 எதிர்ப்பதம் தருக:- உறவினர், கிழவனர், வெறுப்பு, திறத்தல்.

8-ஆம் பாடம்

## சுந்தரமூர்த்தி நாயனர்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமிழ் நாடு உய்யக் கயிலாயத்திலிருந்து சிவபிரான் திருவருளால் திருநாவலூரில் ஆதி சைவ மரபில் அவதரித்தார். அப் பிராமணப் பிள்ளையின் அழகைக் கண்ட அந்நாட்டு அரசன் அவரைத் தன்னேடு கூட்டிச் சென்றான். அப் பிள்ளையைத் தன் பிள்ளைபோல் மிகுந்த அன்போடு வளர்த்தான்.

இவருடைய கலியாணக் காலத்தில், சிவபெருமான் வயது முதிர்ந்த பிராமணர் போல வந்து, சுந்தரர் தமது அடிமை, என்று

வாதாடினார். சுந்தரர் எதிர்த்து வாதாடினார்: அதனால், அவர் வன் தொண்டர் என்னும் பெயரைப் பெற்றார்.


சிவபெருமான் கேட்டுக் கொண்டபடியே "பித்தா பிறை சூடி" என்ற தேவாரத்தைப் பாடியருளினார்,

சுந்தரர் திருவாரூரிலே பரவையார் என்னும் பெருமை பெற்ற பெண்ணை விரும்பி மணந்தார். அங்கேயுள்ள பூங்கோயிலில் எழுந்தருளியுள்ள தியாகராசப் பெருமானை வழிபட்டார்; அவரருளால் "தில்லை வாழ் அந் தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று பாடித் திருத்தொண்டர்களைத் துதித்தார்.

திருப்புகலூரிலும் திருமுதுகுன்றத்திலும் இறைவன் பொன் கொடுக்கப் பெற்றார்.

சுவாமிகள் பல தலங்களை வழிபட்டு வரும்போது திருஒற்றியூரிலே சிவனடியாராய சங்கிலியார் என்னும் பெண்மணியை மணந் தார். தமது கண்கள் இரண்டும் மறைந்த போது எம் பெருமானை வேண்டிப் பாடிக் கண்களைப் பெற்று மகிழ்ந்தார்; மேலும் பல தேவாரங்களைப் பாடி அருளினார்.

இவருக்கு அரிய பெரிய நண்பர் சேரநாட்டு அரசராகிய சேரமான் பெருமாள் நாயனார்.



சுந்தரமூர்த்தி நாயனார்

சேர நாட்டில் ஊரொன்றுக் கூடாகச் சுவாமிகள் சென்ருர்கள். அப்போது ஒரு வீட்டில் அழுகைக் குரலும், எதிர் வீட்டில் மங்கல ஒலியும் கேட்கவே சுவாமிகள் காரணத்தை வினுவி அறிந்தார்.

சில வருடங்களுக்கு முன் ஐந்து வயதுள்ள இரு பாலகர்கள் ஒரு குளததிலே குளித்த பொழுது, ஒருவனை முதலை விழுங்கி விட்டது. தப்பிய மற்றப் பாலகனுக்கு அன்று, பூணூற் சடங்கு நிகழ்ந்து கொண்டிருந்தது. முதலை விழுங்கிய தமது பிள்ளையை நினைந்து அதன் தாய் தகப்பன் வருந்திக் கொண்டிருந்தார்கள். அதனை அறிந்த சுவாமிகள் அவர்களுக்கு ஆறுதல் கூறினுர்.

சுவாமிகள் முதலையிருந்த குளத்தின் கரைக்குச் சென்ருர்கள். அங்கே நின்று "கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே" என்று பாடியருளினுர். உடனே முதலை அப்பிள்ளையைச் சென்றகால வளர்ச்சியுடன் கரையிலே உமிழ்ந்தது. சுந்தரர் அதனைப் பெற்றோரிடம் சேர்த்தருளினுர்.

பின் தமிழ் நாட்டிலுள்ள பல தலங்களுக்கும் சென்று இறைவனை வணங்கி அரிய பல தேவாரங்களைப் பாடியருளினுர்;

ஈற்றில் சுந்தரரைச் சிவபெருமான் தம்முடன் சேர்க்க வேண்டுமென்று நினைத்தருளினார். பெருமான் அனுப்பியருளிய வெள்ளை யானையில் ஏறித் தேவர்கள் சூழ்ந்து வரச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கைலையைச் சேர்ந்தார்.

இவருடன் சேரமான்பெருமாள் நாயனாரும் குதிரையில் ஏறிக் கைலையை அடைந்தார்.

இவர்கள் கைலை சேர்ந்தது ஆடி மாதச் சோதி நட்சத்திரத் தினத்திலாம்.

''அத்தா உனக் காளாய் இனி அல்லேன் எனலாமே''

வினாக்கள்

1 வன்றொண்டர் என்ற பெயர் சுந்தர மூர்த்தி நாயனாருக்கு ஏற்பட்டதேன் ?

2 சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அரிய பெரிய நண்பர் யார் ?

3 விட்ட இடம் நிரப்புக.

(அ) ஒரு வீட்டில் அழுகைக் குரல் கேட்டது. எதிர் வீட்டில் ________ ஒலி கேட்டது.

(ஆ) சென்ற கால ________ முதலை பிள்ளையை கரையில் ________

(இ) சுந்தரமூர்த்தி நாயனார் ______ தினத்திலே கைலை சேர்ந்தார்.

5 சுந்தரமூர்த்தி நாயனார் எதில் ஏறிக் கைலை சேர்ந்தார் ?

9-ஆம் பாடம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்

## (1)

### திருநாகைக் காரோணம்

பண்—கொல்லிக் கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

பத்தூர்ப்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடி
பாவையரைக் கிறிபேசிப் படிறுடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொரு
நாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
அவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.

திருச்சிற்றம்பலம்

பொருள்:- கடல் சூழ்ந்த திருநாகைக் காரோணம் என்னும் தலத்தில் இருப்பவரே! பல ஊர்களுக்கும் சென்று இரந்து உண்பவரே! நீர் பல பாடல்களையும் பாடிக் கொண்டு பெண்களோடு வஞ்சமாகப் பேசுகிறீர். வஞ்சகச்செயல்களைச் செய்கிறீர். இறந்து போன பிர்மா விஷ்ணுக்களுடைய எலும்பை ஆபரணமாகக் கொண்டு இடபத்திலே ஏறி எங்கும் செல்லுவீர். என் செல்வத்தையும் மறையச் செய்து விட்டீர். என்னை இன்று கண்ணெடுத்துப் பார்க்கவேண்டும். எனக்கு முத்தும் மணியும் வயிரமும் பொருந்திய மாலையை அணிய அருள் செய்ய வேண்டும். மேனியிலே பூசுவதற்கு நல்ல வாசம் பொருந்திய புனுகும் சந்தனமும் தரவேண்டும்.

குறிப்பு:- பத்தூர்—பல இடங்கள். புக்கு—புகுந்து. கிறி பேசி — மயக்கத்தைத் தரும் வார்த்தை பேசி. படிறு—

வஞ்சகம், சே — இடபம், முத்து ஆரம் — முத்து மாலை, இலங்கி—பிரகாசித்து, மிளிர் — விளங்கும், கோவை - மாலை

[சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனைத் தோழனுகக் கொண்டார். ஆகையால் அவர் வேண்டியவற்றைச் சிவனிடமிருந்து கேட்டுப் பெற்ருர்.]

(2)

பண்—பழம்பஞ்சுரம்

திருக்கடவூர் மயானம்

திருச்சிற்றம்பலம்

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமான் அடிகளே!.

திருச்சிற்றம்பலம்

பொருள்: விஷ்ணுவுக்கும், பிரமனுக்கும், இந்திரனுக்கும், தேவர்கள், பாதாள உலகத்தவர், அரக்கர் யாவருக்கும் தலைவர். அவரே திருக்கடவூர் மயானத்திலே இருக்கின்ற பெரிய பெருமானுகிய சிவன்; வாசனை வீசும் கொன்றை மாலையும் பிறைச் சந்திரனும் அணிவார். சிவந்த மாணிக்க மலை போல் உமா தேவியாருடன் பூதங்கள் தம்மைச் சுற்றிவர இடப வாகனத்தில் வருவார்.

குறிப்பு:- மரு—வாசனை, ஆர்—நிரம்பிய, தானவர்—அசுரர், அடிகள் — கடவுள், சிவன்.

(3)

திருக்கேதீச்சரம்

பண்—நட்டபாடை

[இது எமது இலங்கையிலே மன்னார்ப் பகுதியிலுள்ள மிகப்பழைய சிவத்தலம். பாலாவியின் கரையிலுள்ளது. கேது என்னும் பாம்பு வழிபட்ட தலம் ஆகையால் இப் பெயர் பெற்றது.]

திருச்சிற்றம்பலம்

நத்தார் படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம் மத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின்
கரைமேல்
செத்தா ரெலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே

திருச்சிற்றம்பலம்

பொருள்:- சங்காகிய படையை உடைய ஞானம்மிக்க (விஷ்ணுவாகிய) இடபத்திலே ஏறி வருவார். மதம் பொருந்திய தூங்கும் வாயையுடைய யானையின் தோலை அணிந்தவர். என்றும் மணவாளக் கோலமுடையவர். இத்தகைய சிவன் அன்புமிக்க தொண்டர்கள் வழிபடுகின்ற பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான்.

குறிப்பு:- நத்து—சங்கு, ஞானன்—ஞானத்தையுடைய விஷ்ணு. பசு—விஷ்ணுமூர்த்தியே பசுவாகத் தாங்குகிறார். நனை கவிழ் வாய்—மதத்தால் நனையும், தொங்கும் வாயையுடைய யானை.

10-ஆம் பாடம்

# கந்தசுவாமியார் பிரமதேவனுக்குப் படிப்பித்தது

கைலை மலையிலே சிவபிரானையும் உமா தேவியாரையும் வணங்குவதற்குப் பிரம தேவன் வந்தான். இருவரையும் வணங்கிச் செல்லும் போது என்றும் இளையவராகிய முருகப் பெருமான் வீற்றிருப்பதைக் கவனிக் காதவன் போலச் சென்றான். அவனைப் பெருமான் கூப்பிட்டார்.

பிரமன் பணிவுடன் வந்து நின்றான். "தந்தையார் கொடுத்தருளிய படைப்புத் தொழிலைச் செவ்வையாகச் செய்கிறாயா?" எனப் பெருமான் பிரமனைப் பார்த்துக் கேட்டார். "ஆம்" என்று பிரமன் விடை கூறினான். "எதன் துணைகொண்டு படைப்புத் தொழிலைச் செய்கிறாய்?" எனக் கந்தசுவாமியார் கேட்டார். "பிரணவமாகிய வேத மந்திரத்தின் துணைகொண்டு செய்கிறேன்" என்றான் பிரமன்.

"உனக்கு அந்த மந்திரத்தின் பொருள் தெரியுமா?" என்று முருகன் கேட்ட போது "ஆம்" என்று பதில் தந்தான் பிரமன். "அப்படியானால் அதன் பொருளைக் கொஞ்சம்

கூறு பார்க்கலாம்'' என்றதும், பிரமன் திகைத்து விழித்தான். அப்போது முருகப் பிரான் தமது திருக்கரத்தால் அவனைக் குட்டிச் சிறையிலிட்டார்.

திருமால் முதலிய தேவர்கள் சிவபெருமானிடம் சென்றார்கள். பிரமனைச் சிறை விடுவிக்க முருகப் பெருமானைக் கேட்குமாறு வேண்டுதல் செய்தார்கள். தேவர்கள் தம்மைப் புடைசூழச் சிவபிரான் தேவர்களின் வேண்டுதலைத் தம் அருமை மகனாருக்குத் தெரிவித்தார்.

முதலிலே கந்தசுவாமியார் மறுத்தார். பின் தந்தையார் சொற்படியே பிரமனைச் சிறை விடுத்தார். பிரமன் செருக்கடங்கிப் பணிவுடன் முருகப் பெருமான் முன்னிலையில் தாழ்ந் தெழுந்தான்.

பிரணவத்தின் பொருளைத் தமக்குச் சொல்லுமாறு தந்தையார் குமாரனைப் பார்த்து அன்புடன் கேட்டார். தம்மைக் குருவாக ஏற்றால் தான் பொருள் சொல்ல முடியும், என்று முருகப் பெருமான் தெரிவித்தார்.

அதனைச் சிவபெருமான் ஏற்றுக் கொண்டார். குருவாய் மாறிய முருகன் ஓங்காரத்தின்

தெளி பொருளைத் தந்தையின் மடியிலிருந்து இயம்பினர்.

இதனாலே முருகப் பெருமானுக்குச் "சிவகுருநாதன்" என்றும் "சுவாமிநாதன்" என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

"குருவாய் அரற்கும் உபதேசம் வைத்த குகனே"

வினாக்கள்

1 பிரமதேவன் செய்யும் தொழில் யாது ?
2 பிரமதேவன் எதன் துணைகொண்டு படைப்புத் தொழிலைச் செய்கிறான் ?
3 யார் கேள்விப்படி முருகன் பிரமதேவரை விடுதலை செய்தார் ?
4 முருகப் பிரானுக்குச் சிவகுருநாதன் என்ற பெயர் ஏன் வந்தது ?

---

11-ஆம் பாடம்

## சிவபெருமான் மண் சுமந்தமை

மதுரையிலிருந்து அரசாண்ட அரிமர்த்தன பாண்டிய மன்னன் தன் மந்திரியாகிய மாணிக்க வாசகரை அதிகம் தண்டித்து விட்டான். அப் பெரியாரோ சிவமே தமக்குத் துணை எனப் பொறுமையோடு தண்டனையை அனுபவித்தார்.


குழந்தை வருந்துவதைக் கண்டு தந்தை பொறுத்திருக்க மாட்டார் அன்றே! சிவ பெருமான் தன் அன்பருடைய வருத்தத்தை நீக்கத் திருவுளங் கொண்டார். வைகை ஆற் றைப் பெருக்கெடுக்கச் செய்தார்.

சாந்தமான வைகை மூர்க்கமாகப் பெருகத் தொடங்கியது. அது எல்லை கடந்து பரவியது. கரைகளை உடைத்து மக்களை நடு நடுங்கச் செய்தது. பாண்டியன் அளவு கடந்து அவரை வருத்திய தன் தவறை உணர்ந்து மாணிக்க வாசகரிடம் மன்னிப்புக் கேட்டான்.

மன்னன், ஆறு கரையை உடைக்காமல் தடைசெய்து கட்டுவிக்கும் வேலையை முன் னின்று நடத்துமாறு மாணிக்க வாசகரை வேண்டினான்.

அரச கட்டளைப்படி ஊரவர் எல்லோரும் தமக்கு அளந்து விடப்பட்ட பங்கை அடைத்தனர்.

ஒரேயொரு பங்கு மாத்திரம் அடைக்கப் படவில்லை. சோமசுந்தரப் பெருமானை நம்பிப் பிட்டு விற்று வாழும் வந்தி என்னும் ஏழைக் கிழவி மதுரையிலே வசித்தாள். அவ ளுக்கு வேலையாள் கிடைக்கவில்லை.



சிவபெருமானுகிய கூலியாள் வந்தித் தாயிடம் கூலியாகப்
பிட்டினைப் பெற்று உண்ணுதல்.

வந்தி பெருமான் கோயில் வாயிலில் வந்து நின்று, “சுவாமி, யானோ உற்றார் உறவினர் அற்ற ஏழை. எனக்குக் கூலி வேலை செய்ய வருபவர் யாரும் இல்லை. அரசன் தண்டிக்கப் போகின்றானே. சோமசுந்தரப் பெருமானே! பேய் போன்ற இந்த ஏழையை நீயே கண்ணெடுத்துப் பார்” என்று இரங்கி அழுதாள்.

பெருமான் அவளிடம் இரக்கம் கொண்டார். அவர், அழுக்குப் படிந்த கந்தையுடுத்து, அழகான மேனியையும் அழுக்குப் படிந்தது போல ஆக்கினார். தலையிலே கூடையும், தோளிலே மண்வெட்டியும் கொண்டு வீதி வழியியே தம்மை வேலை கொள்வார் உளரோ என உரத்த குரலில் கேட்டார்.

அந்தக் குரல் வந்திக் கிழவியின் காதில் கேட்டது. மகிழ்ச்சியடைந்து அந்தக் கூலியாளைக் கூப்பிட்டாள். அவருக்கு உண்ணப் பிட்டும் கொடுத்துக் கரையை அடைக்கும் வேலைக்கு அனுப்பினாள்.

அந்தக் கூலியாள் ஒருகூடை மண்ணைக் கரையிலே கொட்டுவார். களைத்தவர் போலக் கொன்றை மர நிழலிலே கண் வளர்வார்.



கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமானை,
பாண்டிய மன்னன் சேவகனைக் கொண்டு அடிப்பித்தல்

கந்தைத் துணியிலே தாம் கட்டிவந்த பிட்டை அருந்துவார். ஆனால் தனக்கிடப்பட்ட வேலையை மாத்திரம் செய்யவில்லை.

வந்தித் தாயும் கூலியாளை வேலைசெய்ய ஏவியும் பயனில்லை. வருத்தத்தோடு வீடு திரும்பினாள்.

வேலையை மேற்பார்வை செய்பவர்கள் கூலியாளின் விளையாட்டைப் பார்த்தனர். ஒரு ஏவலாளன் கைச் சவுக்கால் கூலியாளுக்கு வலப் பக்கத்தில் அடித்தான்.

அந்த அடி எல்லா ஆன்மாக்களின் உடம்பிலும் உறைத்தது; உலகம் திடுக்கிட்டது.

கூலியாள் மதுரைச் சொக்கநாதரே என அறிந்து யாவரும் மண் சுமந்த பெருமானை யும் அவரை மண் சுமக்கச் செய்த வந்தி அம்மையையும் துதித்தனர். மாணிக்கவாசகரை வணங்கினர்.

"இன்றெமை உய்யக் கொள்வாய் போற்றி"

### வினாக்கள்

1 வைகை பெருகியதற்குக் காரணம் யாது?

2 எங்குள்ள கடவுளுக்குச் சோமசுந்தரப் பெருமான் என்று பெயர்?

3. எதிர்ப் பதம் எழுதுக.
   (அ) சாந்தம்
   (ஆ) வேலையாள்
   (இ) அழுக்கு
   (ஈ) உரத்த குரல்
   (உ) வருத்தம்

4. எப்போது கூலியாள் மதுரைச் சொக்கநாதர் என்று மதுரையிலுள்ளார் அறிந்தனர் ?

12-ஆம் பாடம்

# திருவாசகம்

## (1)

### தில்லையில் அருளிய அச்சோப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்
வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

திருச்சிற்றம்பலம்

பொருள்:- சிவபிரானை அடையும் வழியை அறியாத கெட்டவர்களோடு சேர்ந்தவன் யான். எனினும் அடியேனுக்கு அன்பு வழியைக் காட்டியருளினர் சிவபெருமான்.



மாணிக்கவாசக சுவாமிகள்

என் பழைய பொல்லாத வினைப்பயன்கள் அழிந்தொழியும் படி மன அழுக்கை நீக்கினர். என்னையும் தன்னைப் போல சிவமாக) ஆக்கி ஆண்டருளிய என் பிதாவாகிய சிவன் எனக்குச் செய்த திருவருளை யார் தான் அறிய முடியும். (ஒருவராலும் முடியவே முடியாது )

குறிப்பு:- முத்தி-மோட்சம். சித்த மலம்-மன அழுக்கு. அத்தன்-பிதா. அச்சோ-இது என்ன ஆச்சரியம்.

( 2 )

அன்னைப் பத்து

[இத் திருவாசகப் பாடல் ஒரு குழந்தை தாயை நோக்கிக் கூறியதாக அமைந்திருக்கிறது.]

திருச்சிற்றம்பலம்

வேத மொழியர்வெண் நீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதரிந் நாதனர் அன்னே என்னும்.

திருச்சிற்றம்பலம்

பொருள்.- சிவபெருமானுடைய வாயினின்றும் வருவன வேதவாக்குக்கள். திருமேனியில் அவர் வெண்ணிறத் திருநீறு அணிந்திருக்கிறார். அவரது திருமேனி செக்கச்சிவந்தது. அவருடைய திருக்கரத்திலே எல்லா ஒலிகளுக்கும் மூலமாகிய நாத ஒலியை எழுப்பும் உடுக்கை உண்டு. என் தாயே அதனைப் பாருங்கள். இந்த உடுக்கையை உடையவரே பிரமா, விஷ்ணுக்களுக்குத் தலைவர்.

குறிப்பு:- நாதப்பறை - ஓசையை எழுப்பும் உடுக்கை. இது சிவபெருமானது வலது கரத்திலே உள்ளது]

# கௌசிக முனிவர்

கொங்கணம் என்னும் ஊரிலே கௌசிகன் என்னும் பெயரையுடைய ஒருவன் இருந்தான். அவன் நெடுங்காலம் தவம் செய்தான். ஒரு தினம் அவன் ஒரு மரத்தின் கீழ் இளைப்பாறினான்.

அப்போது ஒரு கொக்கு அவன் மேல் எச்சமிட்டது. கோபத்துடன் அதைப் பார்த்தான். கொக்கு அப்படியே எரிந்து சாம்பராயிற்று.

தனக்குத் தவம் பலித்துவிட்டது என்ற செருக்குடன் நடந்து சென்றான்.

அவனுக்குக் கடும் பசி எழவே ஒரு வீட்டிற்குப் பிச்சை எடுக்கச் சென்றான். "அம்மா பசிக்கிறது; பிச்சை இடுங்கள்" என்றான். அம்மாள் கவனித்ததாகத் தெரியவில்லை. சிறிது நேரம் பொறுமையோடு நின்றான். தான் கேட்ட உடனே அம்மாள் பிச்சை போடவில்லையே என்று தனக்குள்ளே எண்ணிச் சினங்கொண்டான். அப்போது அம்மையார் சுகமில்லாத தமது கணவனுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து கொண்டிருந்தார்.

அம்மையார் தம் கடமையைச் சரிவரச் செய்த பின்னரே பிச்சையுடன் வந்தார்.

கோபங் கொண்ட கௌசிகன் சினத்துடன் அம்மையாரைப் பார்த்தான். அம்மையார் சிறிதும் தயங்காமல் "என்னையும் கொக்கென்று நினைத்தாயோ, கொங்கணவா?" என்று கேட்டார்.

கௌசிகனுடைய சினம் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்துவிட்டது.

அந்நுண்ணிய ஞானம் அம்மையாருக்கு எங்ஙனம் கைவந்தது என்று வினவினான். "நான் என் கணவனுக்குச் செய்யும் கடமைகளைத் தவறாது செய்வதனாலே ஞானம் பெற்றேன். நீயும் ஞானம் பெற விரும்பினால் வேடனாகிய தருமவியாதனிடத்துச் செல்லுக" என்றார்.

கௌசிகன் அம்மையாரைப் பணிந்து அவ் வேடனிடம் சென்றான். வேடனது ஞானம், தாய் தந்தையாருக்கு அன்புடன் செய்யும் கடமையினாலேயே கிட்டியது எனக் கௌசிகன் அறிந்தான்.

தன் தவத்தின் குறையை உணர்ந்த கௌசிகன், மேலும் தவ வழிகளில் ஈடுபட்டான். முனிவரெனப் பிறர் போற்றும் அளவிற்குக் கௌசிகன் நிலை உயர்ந்தது.

வினாக்கள்

1. கௌசிகன் எங்ஙனம் பிச்சை கேட்டான்?
2. அந்த அம்மான் பிச்சை போடத் தாமதித்தது ஏன்?
3. "என்னைக் கொக்கென்று நினைத்தாயோ, கொங்கணவா?" இப்படிக் கேட்டவர் யார்?
4. அம்மையாருக்கு எங்ஙனம் ஞானம் ஏற்பட்டது?

14-ஆம் பாடம்

# பட்டினத்துப் பிள்ளையார்

இவர் காவிரிப்பூம் பட்டினத்திலே நல்ல சிவபத்தி நிறைந்த குடும்பத்திலே பிறந்தார். பெற்றோர் இவருக்குத் திருவெண்காடர் என்று பெயரிட்டனர். ஐந்தாம் வயதிலே இவர் தந்தையார் இறக்க, தாயாரே இவரைப் பாதுகாத்து வளர்த்தனர்.

திருவெண்காடர் இளம் வயதிலே திறமையாகக் கல்வி கற்றுச், சைவ சாத்திரத்திலே சிறந்து, சைவப்பற்றுடையவராக இருந்தார்.

இவர் சிவகலை என்னும் பெண்மணியை மணந்தார். இவர்களுக்குப் பிள்ளைகள் இல்லாமையால் திருவிடைமருதூர்க் கடவுளை வணங்கி விரதமிருந்தார்கள். ஓர் அன்பருக்குக் கிடைத்த மருதவாணர் என்ற பிள்ளையை

ஏற்றுத் தமது சொந்தப் பிள்ளை போலவே மிக்க அன்புடன் வளர்த்து வந்தார்கள்.

அந்தப் பிள்ளை வியாபாரம் செய்யப் புறப்பட்டது. வியாபாரம் செய்து ஊர் திரும்பிய பிள்ளை, தந்தையாருக்குக் கொடுக்கும்படி தாயாரிடம ஒரு பேழையைக் கொடுத்து எங்கோ சென்றுவிட்டது.

தகப்பஞர் பெட்டியைத் திறந்தார். அப்போது அதற்குள்ளே காதற்ற ஊசியும் ஒரு கடிதமும் இருக்கக் கண்டார். கடிதத்தை விரித்துப் படித்தார்.

ஒருவன் இறந்த பின் காதற்ற அற்ப ஊசியும் அவனுடன் வரமாட்டாது, என்று எழுதப்பட்டிருந்தது. கடிதத்தை வாசித்த உடனே, தமது பொருளையெல்லாம் சிவனடியார்களுக்குக் கொடுத்துவிட்டுத் தாமும் துறவியாஞர். பிச்சை எடுத்து உண்டு வந்தார்.

இவர் பிச்சை எடுத்து உண்பதை இவரது சகோதரியார் விரும்பவில்லை. நஞ்சு கலந்த அப்பத்தைத் தம தம்பியாருக்குக் கொடுத்தார். சுவாமிகள் "தன் வினை தன்னைச் சுடும். ஓட்டப்பம் வீட்டைச் சுடும்" என்று கூறிஞர். அந்த அப்பத்தையும் தமக்கையாரின் வீட்டின் மேல் வீசி எறிந்தார். உடனே சகோதரியாரின் வீடு நெருப்புப் பற்றி எரியத் தொடங்கியது.

இவர் தம் தாயார் இறந்தபோது மிகவும் வருந்தினார். இறந்த தாயாரின் உடலை வாழைத் தண்டிலே கிடத்தி, தாயாகிய தெய்வத்தை நினைந்து, இரங்கிப் பாடல்கள் பாடினார். யாவரும் ஆச்சரியம் அடைய, நெருப்பானது தானே மூண்டெழுந்து தாயாரின் உடலைச் சாம்பராக்கியது.

சுவாமிகள் தம் தாயாரின் தீக்கடன், நீர்க் கடன்களைச் செய்தபின் வடதேசத்துக்குச் சென்றார். அப்போது ஓர் இரவு ஒரு பிள்ளையார் கோவிலிலே யோகத்திலிருந்தார். ஓர் அரமனையிற் களவெடுத்த கள்வர் காணிக்கையாகப் பிள்ளையார் திருவுருவத்திற்கு ஒருமுத்து மாலையை எறிந்தார்கள். அது தவறி யோகத்திலிருந்த இவர் கழுத்திலே விழுந்துவிட்டது.

கள்வரைத் தேடித் திரிந்த ஊர்காவலர் முத்துமாலையோடு இவரைக் கண்டனர். இவர் தான் கள்வன் என நினைத்து இவரைக் கூட்டிச் சென்று அரசன் முன்னே நிறுத்தினர்.

ஒரு பாவமும் அறியாத இவரை அரசன் கழுவிலேற்றக் கட்டளையிட்டான். அப்போது கழுமரமே பற்றி எரிந்தது.

அது கண்ட அந்தப் பத்திரகிரி என்னும் அரசனும் இவரைப்போலவே துறவியானான்.

சுவாமிகள் பின் தமிழ் நாட்டிற்குத் திரும்பி வந்தார். திருவொற்றியூரிலே இடைச் சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தார். திடீரென மறைவதும் பின்பு தோன்றுவது மாய்ப் பல அற்புதங்களைச் செய்தார்.

பின் அப் பிள்ளைகளைக் கொண்டு ஒரு தண்ணீர்ச் சாலினால் தம்மை விளையாட்டாக மூடச் செய்தார். அவர்கள் மூடிய சாலைத் திறந்து பார்த்தபோது எல்லோரும் அதிசயிக்கச் சுவாமிகள் சிவலிங்க உருவமாயிருந்தார்.

பட்டினத்தடிகளுக்குத் திருவொற்றியூரிலே இன்றும் சமாதி உள்ளது.

"எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே"

## வினாக்கள்

1. திருவெண்காடர் மருதூர்க் கடவுளை ஏன் விரதமிருந்து வணங்கினார்?
2. மருதவாணர் திருவெண்காடருக்குப் பேழையுள் வைத்து அனுப்பியவை எவை?
3. நிரப்பி முடிக்கவும்.
   (அ) ஒருவன் இறந்த பின் காதற்.........
   (ஆ) தன் வினை.....................
   (இ) பட்டினத்தாருக்குத் திருவொற்றியூரில்...............

# யாழ்ப்பாணம் வைத்தீசுவரன் கோயில்

“திரை கடலோடியும் திரவியம் தேடு” என்றார் ஔவைப் பிராட்டியார். அவர் வாக்குப்படி பொருள் தேட இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கடல் கடந்து வந்தவர் கோபாலச் செட்டியார். அவருக்கு மகன் வைத்திலிங்கச் செட்டியார். இவர் முத்து வியாபாரம் செய்து பெரும் பொருள் ஈட்டினார்.

இவருக்கு ஆசிரியராக இருந்தவர் கல்வி அறிவிலும் சைவ ஒழுக்கத்திலும் சிறந்தவராகிய கூழங்கைத் தம்பிரான். அவர் சொல்லியபடி நடப்பவர் செட்டியார்.

செட்டியார் தமக்கென்று ஒரு பெரிய வீடு கட்ட நினைத்தார். வீடு கட்ட முன் சிவபிரானுக்கு ஆலயம் ஒன்று எழுப்ப வேண்டும் என்று சொன்னார் தம்பிரான்.

அவர் வாக்குப்படியே செட்டியார் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலே பெரிய நிலப்பரப்பை விலைக்கு வாங்கினார். அந்த நிலத்திலே செட்டியார் 1790 ஆம் ஆண்டு சிவபெருமானுக்குப் பெரிய கோயில் ஒன்றைக் கட்டுவித்தார். அவர் பொருளோடு அருளையும் தேடினார்.

எங்கள் உடலுக்கு நோய்வந்தால் அதற்கு வைத்தியர் மருந்து தருவார். உடல் நோயை மாற்ற ஊர்தோறும் வைத்தியர்கள் பலர் உளர். ஆனால், உயிருக்கு வரும் நோய்க்கு வைத்தியர் சிவபெருமான் ஒருவரே.

இச் சிவபெருமானுக்கு என்று வைத்தி திலீபகச் செட்டியார் வண்ணார்பண்ணையிலே எழுப்பிய கோயிலே வைத்தீசுவரன் கோயில் எனப்படுகிறது. அங்குள்ள இறைவனுக்கு வைத்தீசுவரன் என்றும் தேவிக்குத் தையல் நாயகி என்றும் பெயர்.

கோயிலைப் போலவே அங்கேயுள்ள திருக் குளமும் அழகானது. யாழ்ப்பாணப் பட்டி னத்தவர் ஆசாரமும் கடவுள் பத்தியு முடைய வராய் இருப்பதற்கு இக்கோயிலே காரணம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இக்கோயிலின் வசந்த மண்டபத்தில் அரிய பிரசங்கங்கள் செய் தார். அவர் மருமகன் வித்துவ சிரோமணி பொன்னம்பலப்பிள்ளையும் புராணப் பிரசங்கங் களை இங்கேயே செய்தார். சமீபகாலத்தில், பழைய முறைப்படி, ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாசாரிய சுவாமிகளினுடைய பிரசங் கங்களும் இங்கு நடை பெறுகின்றன.

"மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான்"

## வினாக்கள்

1. செட்டிமார் எதில் வல்லமை உடையவர் ?
2. கூழங்கைத் தம்பிரான் யார் ?
3. உயிர் நோய்க்கு வைத்தியர் யார் ?
4 வைத்தீசுவரன் கோயில் மண்டபத்திலே பிரசங்கம்செய்த இரு பெரியாரின் பெயர்களைத் தருக.

---

16-ஆம் பாடம்

திருமூலர் அருளிய

# திருமந்திரப் பாடல்

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

திருச்சிற்றம்பலம்

பொருள்:- விநாயகப் பெருமானுக்கு ஐந்து திருக்கரங்கள் உண்டு. அவர் முகம் ஆனை முகத்தைப் போன்றது. அவர் முகத்திலுள்ள கொம்பு பிறைச் சந்திரனைப் போன்றது. அவர் சிவபெருமானுக்கு மூத்த புதல்வர். அவர் ஞானமே வடிவானவர். அப் பெருமானை என் மனத்திலே இருத்தி யான் வணங்குகிறேன்.

குறிப்பு:- ஐந்து கரம்; விநாயகப் பெருமானுக்கு நான்கு திருக்கரங்களும் ஒரு துதிக்கையுமாக ஐந்து கரங்கள் உண்டு.

ஆனை முகம்—யானைக்கு முகத்திலுள்ள துதிக்கை ஓங்கார வடிவமானது. இந்து—(பிறைச்) சந்திரன். எயிறு—பல் (கொம்பு). நந்தி—சிவபெருமான், புந்தி—மனம்.

நக்கிர தேவநாயனுர் அருளிய

# திருமுருகாற்றுப்படை

திருச்சிற்றம்பலம்

முருகனே! செந்தில் முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! — ஒருகைமுகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால்
எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

திருச்சிற்றம்பலம்

பொருள்:- முருகப் பெருமானே! திருச் செந்தூரில் எழுந்தருளியிருக்கும் முழுமுதலே! விஷ்ணு மூர்த்திக்கு மருமகனே! சிவபெருமானுக்கு இளைய குமாரனே! ஒப்பில்லாத துதிக்கையையுடைய விநாயகப் பெருமானுக்குத் தம்பியே! உன் வீரக் கழல் அணிந்த பாதங்களை எனக்குத் துணையென நம்பி நான் எப்பொழுதும் கைகுவித்துத் தொழுவேன்.

அருணகிரிநாத சுவாமிகள் அருளிய

# திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடும்முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதிஅரு ணசலம் அமர்ந்த பெருமாளே.

பொருள்:- மிகச் சிறந்த திருவண்ணமலையில் வீற்றிருக்கின்ற முருகப் பெருமானே! உனது ஆறு திருமுகங்களிலே

ஒரு திருமுகம் ஆண்மயிலில் ஏறித் திருவிளையாடலைச் செய்கின்றது. ஒரு திருமுகம் சிவபெருமானுடன் பிரணவ மந்திரப்பொருளை எடுத்துரைக்கின்றது; ஒரு திருமுகம் உன்னைப் புகழ்ந்து தோத்தரிக்கும் அடியார்களின் பொல்லாத வினைகளைத் தீர்க்கின்றது; ஒரு திருமுகம், (தாரகன் மறைந்து நின்ற) கிரவுஞ்ச மலையை ஊடுருவித் தாக்கிய வேலை ஏந்தி நின்றது; ஒரு திருமுகம், உன்னோடு பகைகொண்ட சூரபன்மனைக் கொன்றது; ஒரு திருமுகம், வள்ளியம்மையாரைத் திருமணஞ்செய்ய வந்தது; இங்ஙனம் ஆறு திருமுகங்களைக் கொண்டு திருவிளையாடல் புரிந்த கடவுளே! நீ எனக்கும் திருவருள் செய்தருளவேண்டும்.

குறிப்பு:- ஏறு மயில்—ஆண்மயில். ஞானமொழி—வேதப் பொருள். கூறும்—உன் புகழைச் சொல்லும், குன்று—கிரவுஞ்ச மலை. ஆதி அருணாசலம்—சிறந்த திருவண்ணாமலை.

17-ஆம் பாடம்

# உலகநீதி

**காப்பு**

உலகநீதி புராணத்தை உரைக்கவே
கலைகளாய் வரும் கரிமுகன் காப்பு.

உலக நீதி—உலகம் முழுவதற்கும் பொருத்தமான அறிவுரை. மாணவர் அறியவேண்டிய நீதிகள் இவை.

கலைகள்—சாத்திரம். கரிமுகன்—யானைமுகக் கடவுள். காப்பு—பாதுகாவல்.

ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்

வாகாருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

குறிப்பு:- ஓதாமல்—படிக்காமல், பொல்லாங்கு—கொடுமை, புறஞ்சொல்லுதல்—ஒருவரில்லாத நேரம் தூற்றுதல், வாகாரும்—வெற்றியுடைய.

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்தவேண்டாம்
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்
நல்லிணக்கம் இல்லாரோ டிணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
மஞ்சாருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

குறிப்பு:- அடுத்தவர்—நம்பி நம்மைச் சேர்ந்தவர், மஞ்சாரும்—வலிமை மிக்க.

மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவென்று நம்பவேண்டாம்
தனந்தேடி உண்ணாமல் புதைக்கவேண்டாம்
தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்
சினந்தேடி அல்லலையும் தேடவேண்டாம்
சினத்திருந்தார் வாசல்வழிச் சேரவேண்டாம்
வனந்தேடும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

குறிப்பு:- மாற்றான்—பகைவன், தனம்—பொருள், அல்லல்—துன்பம், சினந்தேடி அல்லலையும் தேடவேண்டாம்—எங்களுக்குக் கோபம் வந்தால் துன்பம் வந்து சேரும், சினத்திருந்தார்—கோபத்தில் நின்று நீங்காதவர், வனம்—காடு.

குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டாம்

கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனே டெதிர் மாறுபேச வேண்டாம்
கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்
மற்றுநிகர் இல்லாத வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

குறிப்பு:- குற்ற மொன்றும் பாராட்டித் திரிய வேண் டாம்—பிறருடைய குற்றங்களைப் பெரிதாக்கிச் சொல்ல வேண்டாம். கொற்றவன்—அரசன். எதிர்மாறு—எதிர்த்த சொல்.

## அகில இலங்கைச் சைவசமயப் பாடப் பரீட்சை

## 1972

### வினுத்தாள்

1. (அ) "வாழ்க அந்தணர்" என்ற தேவா ரத்தை எழுதுக.

(ஆ) விட்ட இடங்களை நிரப்புக:

முத்தி நெறி அறியாத ..................
பத்தி நெறி அறிவித்துப் ..................
சித்த மலம் அறுவித்து ..................
அத்தன் எனக்கருளியவாறுர் ..................

2. பொருத்தமான சொற்களை இட்டுக் கிறிட்ட இடங்களை நிரப்புக.

(அ) கடவுள் ஆன்மாக்களுக்கு அருள் புரியச் சிறப்பாக எழுந்தருளியிருக்கும் இடம் ..............................

(ஆ) சிவபெருமான் எங்களுக்குத் தந்தையா

கவும் .................. இருந்து வேண்டிய நன்மைகள் செய்கிறார்.

(இ) பாலாவியின் கரையிலுள்ள சிவத்தலம் ..................ஆகும்.

(ஈ) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வைத்தீசுவரன் கோவில் வசந்த மண்டபத்தில் .....................செய்தார்.

(உ) சோமசுந்தரப் பெருமானை நம்பிப் பிட்டு விற்று வாழ்ந்து வந்தவர் ...............

(ஊ) பெண்கள்......உறுப்புக்களும் நிலத்திலே படிய விழுந்து வணங்குதல் வேண்டும்.

(எ) திருவெண்காடர்..... .............என்னும் பெண்மணியை மணந்தார்.

(ஏ) கணநாத நாயனார் அடியார்களை.........ஈடுபடுத்தினார்.

(ஐ) தாய் தந்தையார்க்கு அன்புடன் செய்த கடமையினாலேதான் வேடனுக்கு.........கிட்டியது.

3. விட்ட இடங்களை நிரப்புக.

மனம்போன போக்கெல்லாம் ...........
............உறவென்றும் நம்ப ..........
.......................மறக்க வேண்டாம்.
சினந்தேடி அல்லலையுந் ..................
............ வாசல் வழிச்சேர............
வனந்தேடுங் குறவருடை..... ............
மயிலேறும் பெருமானை .......... ..........

4. சிவபெருமான் மண் சுமந்தமை பற்றி மூன்று வாக்கியம் எழுதுக.

# அகில இலங்கைச் சைவசமயப் பாடப் பரீட்சை
## 1973
### வினாத்தாள்

1. பொருத்தமான சொற்களை இட்டுக் கீறிட்ட இடங்களை நிரப்புக.

(1) கோயிலிலுள்ள இறைவன் திருவுருவத்தை வழிபட்டு நாம் .................. பெறுகிறோம்.

(2) சிவபெருமான் ஆண்டவர், நாம் அவருக்கு ..............

(3) கோயில் மண்டபங்களையும் வீதிகளையும் .................. அலகிடுதல் என்பர்.

(4) செல்லுமிடமெல்லாம் ஆலயத் திருத்தொண்டாகிய .................. தொண்டு செய்தவர் அப்பர்.

(5) கல்லானை கரும்பு கறித்தது மதுரைச் .................. செய்த திருவிளையாடல்.

(6) சிவபெருமான் எப்பொழுதும் தேவி .................... உச்சரிக்கும் கௌரியை இடபத்தில் ஏற்றி அருளினார்.

(7) சிவபெருமான் கேட்டுக்கொண்டபடியே "பித்தா பிறைசூடி" என்ற தேவாரத்தை ......................... பாடியருளினார்.

(8) "கேது" என்னும் பாம்பு வழிபட்ட தலம்.................

(9) வெள்ளை யானையில் ஏறிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்............ சேர்ந்தார்.

(10) ............ ஓங்காரத்தின் தெளிபொருளைத் தந்தைக்கு இயம்பினார்.

(11) தாய் தந்தையர்க்கு அன்புடன் செய்த கடமையினாலேதான் வேடனுக்கு......... கிட்டியது.

(12) தன்வினை தன்னைச் சுடும் ................. வீட்டைச் சுடும்.

(13) உயிருக்கு வரும் நோய்க்கு வைத்தியர் ....................ஒருவரே

(14) ஐந்து கரமுடையவர் ....................

(15) அரிமர்த்தன பாண்டியனின் மந்திரியாக இருந்தவர்.....................

2. பாடலில் விட்ட இடங்களை நிரப்புக.

(அ) நத்தார்படை ஞானன் பசு ...............
மத்தம் மத ................. மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு .........
செத்தாரெலும்.................

(ஆ) "சொற்றுணை வேதியன்" என்ற தேவாரத்தை எழுதுக.

3. ஓதாமல் ஒரு நாளும் ....................
........................ சொல்ல வேண்டாம்.
.............................மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ........... ...... ....
................ .. ...........போக வேண்டாம்
......................... திரிய வேண்டாம்
வாகாருங் குறவருடை ....................
.................... வாழ்த்தாய் நெஞ்சே.

4. கோயிலுக்குச் செல்லுதல் பற்றி நாலு வாக்கியம் எழுதுக.

உ

# சைவ போதினிகள்

— கொழும்பு விவேகாநந்த சபை வெளியீடு —

கொழும்பு விவேகாநந்த சபையாரால்
நடாத்தப்பட்டு வரும்
அகில இலங்கைச்

## சைவ சமய பாடப் பரீட்சைக்கு.

கல்விப் பகுதியினரின் பாடவிதானங்களுக்கு
அமைய எழுதப்பட்டவை.

## ··○○ சைவ போதனிகள் ○○··

எமது இவ்வெளியீடுகள் யாவும், பாடசாலைகளில் சைவ சமயம் கற்பிப்பதற்குப் பாட நூல்களாகக் கைக்கொள்ளுதற்கு ஏற்றவையாம்.

### வெளியீடுகளின் விலை விபரம்:-

| வகுப்பு | ரூ. ச. |
| --- | --- |
| 2 | 1 - 70 |
| 3 | 1 - 70 |
| 4 | 2 - 00 |
| 5 | 2 - 25 |
| 6 | அச்சில் |
| 7 | அச்சில் |
| 8 | அச்சில் |

### சைவ சமயம்

| | |
| --- | --- |
| 9 (க. பொ. த.) | 9 - 00 |
| நீதிநூற் கொத்து | 3 - 50 |

பாடசாலைகளுக்கும், புத்தக வியாபாரிகளுக்கும்
{ தகுந்த கழிவு கொடுக்கப்படும். }

விபரங்களுக்குச் சபையின் புத்தகசாலை அதிபருடன்
தொடர்பு கொள்ளவும்.

விவேகாநந்த சபை
84, விவேகாநந்த மேடு, கொழும்பு-13
தொலைபேசி: 22676